| | |
|---|---|
| (logo) | **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-8.**<br>**அறிவிக்கை எண்: 01/2023-ன் கூடுதல் அறிவிக்கை**<br>நிலைய அதிகாரிகள், தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை<br>(ஆண் மற்றும் பெண்) பதவிகளுக்கான நேரடி தேர்வு - 2023. |

**தேதி:23.05.2023**

1. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், நிலைய அதிகாரிகள், தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை (ஆண் மற்றும் பெண்) பதவிகளுக்கான நேரடி தேர்வு 2023-க்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து (இந்திய குடியுரிமையுடைய) இணைய வழி விண்ணப்பங்களை (Online Applications) வரவேற்கிறது. ஊதிய விகிதம் ரூபாய்: 36,400 - 1,15,700.

**முக்கிய தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| i | அறிவிக்கை தேதி | | 05.05.2023 |
| ii | கூடுதல் அறிவிக்கை தேதி | | 23.05.2023 |
| iii | எழுத்துத் தேர்வு நடைபெறும் தேதி | பொது விண்ணப்பதாரர்கள் | ஆகஸ்ட் மாதம் 2023-ல் நடைபெறும். சரியான தேதி பின்னர் அறிவிக்கப்படும். |
| | | 20% துறை விண்ணப்பதாரர்கள் | |

**2. காலிப் பணியிடங்கள்** : 128 + 1 (பின்னடைவு காலிப் பணியிடம்)

| பதவியின் பெயர் | பணி விதிகள் | காலிப் பணியிடங்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் | |
| நிலைய அதிகாரி | தமிழ்நாடு தீயணைப்பு சார்நிலைப் பணி விதிகள் | 90 | 38 + 1 (பி.கா) | 128 + 1 (பி.கா) |

**3. ஒதுக்கீடு** :

| ஒதுக்கீடு | மொத்தக் காலிப் பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | காலிப் பணியிட எண்ணிக்கைகள் | தகுதிகள் |
|---|---|---|---|
| துறை ஒதுக்கீடு | 20% | 26 | தமிழ்நாடு தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறையில் பணிபுரிபவர்கள், அரசாணை நிலை எண்: 234, உள் துறை (காவல்-XVII) நாள் :13.05.2023– ல் உள்ளபடி தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். |

**4. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை (PSTM)** : அறிவிக்கை எண் 01/2023-ல் உள்ளபடி.

**5. வயதுத் தகுதிகள்** : விண்ணப்பதாரர்கள் 01.07.2023 அன்று 20 வயது நிறைவு பெற்றவராகவும், 30 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். கீழ்க்கண்ட பிரிவினருக்கு வயது உச்சவரம்புத் தளர்வு அளிக்கப்படும்.

| பிரிவு | உச்ச வயது வரம்பு |
|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | 32 வயது |
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்கு யினர் | 35 வயது |
| ஆதரவற்ற விதவைகள் | 37 வயது |
| முன்னாள் இராணுவத்தினர் / முன்னாள் மத்திய ஆயுத காவல் படையினர் (அறிவிக்கை வெளியிட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்) / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள பணிபுரியும் இராணுவப் படைவீரர்கள் மற்றும் மத்திய ஆயுத காவல் படையினர் | 47 வயது |
| 20% துறை ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் | 47 வயது |

**குறிப்பு** : துறை விண்ணப்பதாரர்கள், பொது ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பதற்கு, பொது ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கான அனைத்துத் தகுதியினையும் பெற்றிருக்க வேண்டும்.

**6. கல்வித் தகுதி** : அறிவிக்கை எண் 01/2023-ல் உள்ளபடி.

**7. வகுப்புவாரி இடஒதுக்கீடு** : அறிவிக்கை எண் 01/2023-ல் உள்ளபடி.

**8. தேர்வு நிலைகள்** :

| வ. எண் | தேர்வு நிலை | பொது ஒதுக்கீடு தேர்வு | துறை ஒதுக்கீடு தேர்வு |
|---|---|---|---|
| 1. | எழுத்துத் தேர்வு | பிரிவு-I தமிழ் மொழித் தகுதித் தேர்வு - கொள்குறி வகைத் தாள் - 100 மதிப்பெண்கள் | |
| | | பிரிவு- II (அ) பொது அறிவு<br>(ஆ) உளவியல் தேர்வு<br>கொள்குறி வகைத் தாள் - 70 மதிப்பெண்கள் | பிரிவு-II (அ) பொது அறிவு,<br>(ஆ) உளவியல் தேர்வு, தீயணைப்பு மற்றம் மீட்புப் பணி தொடர்புடைய விதிகள் மற்றும் நடை முறைகள், நிலைய நடைமுறை, தமிழ்நாடு தீயணைப்பு துறை நடைமுறை நூல் மற்றும் தீயணைப்பு மீட்புப் பணித் துறை நிர்வாகம்.<br>கொள்குறி வகைத் தாள் - 85 மதிப்பெண்கள் |
| 2. | சான்றிதழ்கள் சரி பார்த்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வுகள் | உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வு ஆகியன தகுதித் தேர்வாகும்.<br>உடற்திறன் போட்டி<br>அதிகபட்ச மதிப்பெண்கள் - 15 | உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்திறன் போட்டிகளில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.<br>உடற்தகுதித் தேர்வு தகுதித் தேர்வாகும். |
| 3. | நேர்முகத் தேர்வு | 10 மதிப்பெண்கள் | 10 மதிப்பெண்கள் |
| 4. | சிறப்பு மதிப்பெண்கள் | 5 மதிப்பெண்கள் (தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் விளையாட்டுகள்) | 5 மதிப்பெண்கள் (பணிக் காலத்தில் பெற்ற பதக்கங்கள்) |
| | **மொத்தம்** | **100 மதிப்பெண்கள்** | **100 மதிப்பெண்கள்** |

9. **எழுத்துத் தேர்வு மையம்** : அறிவிக்கை எண் 01/2023-ல் உள்ளபடி.

10. **தேர்வுக் கட்டணம்** : அறிவிக்கை எண் 01/2023-ல் உள்ளபடி.

11. **இணையவழி விண்ணப்பம்** : அறிவிக்கை எண் 01/2023-ல் உள்ளபடி.

12. **தற்காலிகத் தேர்வு** : அறிவிக்கை எண் 01/2023-ல் உள்ளபடி.

13. **மருத்துவப் பரிசோதனை மற்றும் குணநலன்கள் மற்றும் முந்தைய பழக்கவழக்கங்களை சரிபார்த்தல்** : தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனை மற்றும் குணநலன்கள் முந்தைய பழக்கவழக்கங்கள் பற்றி தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறையால் விசாரித்து சரி பார்க்கப்படும்.

14. இத்தேர்விற்கான கூடுதல் தகவல்கள், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு, உடற்திறன் போட்டிகள் மற்றும் சிறப்பு மதிப்பெண்களுக்கான வரன்முறைகள், தகவல் சிற்றேடு மற்றும் அதன் கூடுதல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை விண்ணப்பதாரர்கள் இவ்வாரிய இணையதளமான **www.tnusrb.tn.gov.in** – லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

15. விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தினை, சமர்ப்பிப்பதற்கு முன்னர், இவ்வாரிய இணையதளத்திலுள்ள (**www.tnusrb.tn.gov.in**) அறிவிக்கை, தகவல் சிற்றேடு மற்றும் அதன் கூடுதல் சிற்றேடினை கவனமாக படித்து அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

16. காவல் சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) பதவிகளுக்கான தேர்வுடன் தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை நிலைய அலுவலர்கள் பணிக்கான தேர்வும் சேர்க்கப்பட்ட பின்னர் இந்தத் தேர்வு நடைமுறைகள், இனிமேற்கொண்டு **“காவல் சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) மற்றும் நிலைய அதிகாரிகள், தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறைக்கான ஒருங்கிணைந்த தேர்வு - 2023”** என்று அழைக்கப்படும்.

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,
சென்னை-8.